# தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபை

## கொழும்பு மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 மார்ச் 30 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 மார்ச் 31 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2012 ஒக்டோபர் 16 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபை 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

2007 ஆம் ஆண்டில் நன்கொடையாக வழங்கப்பட்ட ரூபா 7,400,000 க்கான அம்புலன்சு வண்டியினது பெறுமதி ரூபா 740,000 ஆகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிசார் கூற்றுக்களில் காணப்படும் ரூபா 482,028,719 கூட்டுத்தொகையுடைய 7 கணக்கீட்டு மீதிகளுக்குரிய மீதிகள் அவற்றிற்குரிய உப பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காணப்படும் மீதிகளுடன் ஒப்பிடப்படுகையில் ரூபா 12,218,151 வேறுபாடு நிலவியது.

### 1.3.3 கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) செலவினக் கடன் கொடுத்தோர் மீதியாகிய ரூபா 78,095,155 மூன்று மற்றும் 4 ஆண்டுகாலத்திற்கிடைப்பட்ட ரூபா 699,074 கடன்கொடுத்தோர் மீதியையும் 6 ஆண்டுகளைக் கடந்த ரூபா 18,838,855 கடன்கொடுத்தோர் மீதியையும் உள்ளடக்கியிருந்தது.

(ii) மீளாய்வாண்டு இறுதி நாளில் உள்ளவாறு திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்பு மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 34,469,003 ஆகும். முறையே ரூபா 2,172,100 மற்றும் ரூபா 258,750 வருவாய் வைப்பு மற்றும் கேள்வி வைப்பு மீதி என்பன 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மாற்றமடையாது முன்கொண்டுவரப்பட்டவாறிருந்தன. மேலும், ரூபா 29,985,792 நானாவித வைப்பு மீதியில் 2 முதல் 20 ஆண்டு வரையிலான ரூபா 17,531,745 மீதியும் இருந்தது. ரூபா 189,014 ஓய்வூதிய வைப்பு மீதியானது 1996 முதல் 2008 வரையான காலப்பகுதிக்குரியது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றின்மை

#### (அ) பதில் கிடைக்கப்பெறாத கணக்காய்வு ஐய வினாக்கள்

மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட 18 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2012 செப்டம்பர் 30 ஆந் திகதியளவிலும் பதில் வழங்கப்படாதிருந்தன. அந்த ஐய வினாக்களுக்குரிய கணிப்பிடத்தக்க கொடுக்கல் வாங்கல்களது பெறுமதி ரூபா 7,475,077 ஆகும். மேலும், கடந்த 2 ஆண்டு காலப்பகுதியின்போது வழங்கப்பட்ட கணக்காய்வு ஐள வினாக்களில் 17 க்கும் பதில் வழங்கப்படாதிருந்தன.

**(ஆ) தகவல்களைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமை**

தேவையான தகவல்களைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமையால் ரூபா 363,246.411 கூட்டுத்தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்பதிகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

**(இ) கொடுப்பனவு உறுதிச் சான்றுகளைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமை**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத 8 கொடுப்பனவு உறுதிச் சான்றுகளது பெறுமதி ரூபா 240,899 ஆகும்.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்ககப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 35,284,460 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 36,966,222 ஆகும்.

2011 ஆகஸ்ட் 10 ஆந் திகதியன்று மாநகர சபை கலைக்கப்பட்டபோதும், 2011 ஆகஸ்ட் 10 முதல் 31 வரை மற்றும் ஒக்டோபர் 01 முதல் 19 வரையான காலப்பகுதிக்கு படியாக அங்கத்தவர்களுக்கு ரூபா 149,484 மற்றும் ரூபா 131,161 என மொத்தமாக ரூபா 280,645 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது உள்ளூராட்சி ஆணையாளரால் மீளளிப்புச் செய்யப்படவுமில்லை.

### 2.2 வங்கிக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2001 முதல் 2008 வரையான காலப்பகுதியின்போது வரையப்பட்டு, கொடுப்பனவிற்கு வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்த ரூபா 2,315,002 கூட்டுத்தொகையுடைய 374 காசோலைகள் சம்பந்தமாக இலங்கை குடியரசின்

நிதிப் பிரமாணம் 396 க்கமைய நடவடிக்கை எடுக்கப்படாது அவை நானாவித வைப்புகளின் கீழ் கணக்கிலிடப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டினது டிசெம்பர் மாத வங்கிக் கணக்கிணக்கக்கூற்றின் பிரகாரம் கொடுப்பனவிற்காக வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத 6 மாதங்களைக் கடந்த ரூபா 253,281 க்கான 11 காசோலைகள் சம்பந்தமாக இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 396 க்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) கொடுப்பனவு மறுக்கப்பட்ட ரூபா 82,896 கூட்டுத்தொகையுடைய 11 காசோலைகள் சம்பந்தமாக இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 189 மற்றும் 486 என்பவற்றிற்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 2.3 வருவாய் நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், நிலுவையாக உள்ள வருவாய் என்பன

மீளாய்வாண்டின் பொருட்டு மாநகர முதல்வரால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிதியம் |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | தீர்வையும் வரியும் | 157,101 | 159,976 | 231,396 |
| (ii) | குத்தகை வாடகை | 15,948 | 15,963 | 8,024 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 20,516 | 16,793 | 2,567 |
| (iv) | பிற வருவாய் | 221,612 | 220,517 | 147,267 |

### 2.3.2 வருவாயை அறவிடுவதில் நிலவிய நலிவுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ஐந்து வருவாய்த் தலைப்புகளது மீண்டுவரும் வருவாய் விடயங்கள் ஆறினது மதிப்பிடப்பட்ட ரூபா 4,010,000 வருவாயில் எதுவுமே மீளாய்வாண்டின்போது சேகரிக்கப்படவில்லை.

(ஆ) எட்டு வருவாய் விடயங்களில் 50 முதல் 96 சதவீதமும் 9 வருவாய் விடயங்களில் 25 முதல் 50 சதவீதமும் 8 வருவாய் விடயங்களில் 10 முதல் 25 சதவீதமான இலக்கிடப்பட்ட வருவாயை ஈட்ட முடியாது போயிற்று.

(இ) மீளாய்வாண்டின்போது முன்னைய ஆண்டின் பொருட்டு 22 சதவீதமான தீர்வை வரி மாத்திரமே அறவிடப்பட்டிருந்தன. முன்னைய ஆண்டின் பொருட்டு மீளாய்வாண்டின்போது குத்தகை வாடகை நிலுவை எதுவுமே அறவிடப்படவில்லை. மீளாய்வாண்டிற்குரிய தீர்வையும் வரியும், குத்தகை வாடகை, அனுமதிப்பத்திரக் கட்டணம் என்பவற்றில் 65% மாத்திரம் அறவிடப்படக்கூடியதாகவிருந்தது.

### 2.3.3 பிற வருவாய்

அரச நிறுவனம் ஒன்றிற்கு வழங்கப்பட்ட கலீ பவுசர் தொடர்பாக 2007 தொடக்கம் ரூபா 154,107 அறவிடப்படாதிருந்தது.

### 2.3.4 விற்பனைக் கூட வாடகை

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தெஹிவளை, கல்கிஸ்ஸ, கொஹுவல, சரணங்கர, கரகம்பிட்டிய, இரத்மலானையில் உள்ள விற்பனைப் பல்கூட்டுத் தொகுதிகளின் 370 குத்தகையாளர்களது 2011 டிசெம்பர் 31 வரையான நிலுவை மீதி ரூபா 3,187,194 ஆகும். அம் மீதியில் முன்னைய ஆண்டிற்கான வரி நிலுவையான ரூபா 3,075,608 உள்ளடங்கியிருந்தது. குத்தகை உடன்படிக்கையினது 17 ஆம் 19 ஆம் நிபந்தனைகளின் பிரகாரம் நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுக்கவில்லை.

(ஆ) கொஹுவல மற்றும் கல்கிஸ்ஸ விற்பனைப் பல் கூட்டுத்தொகுதியில் உள்ள 4 கடைகளது குத்தகை உடன்படிக்கைக் காலம் முறையே 1996 ஒக்டோபர், 2004

ஜுன், 2006 ஜுன், 2008 ஜுன், ஆகிய காலப்பகுதியின்போது முடிவடைந்திருந்தன. எனினும், 2012 ஜுன் 30 ஆந் திகதியளவிலும் புதிய குத்தகை உடன்படிக்கைகளில் ஈடுபடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.3.5 கட்டிட வாடகை

**பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) தெஹிவளை பொலிஸ் மற்றும் சரணங்கர பொலிஸ் காவல் நிலையம் என்பன உள்ள கட்டிடங்களுக்கு 11 ஆண்டுகளுக்கு மேலாக வாடகை செலுத்தப்படவில்லை. மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறான நிலுவையின் கூட்டுத்தொகை ரூபா 1,338,848 ஆகும்.

(ஆ) மேலும், 17 கட்டிடங்களது குத்தகையாளர்களிடமிருந்து முன்னைய ஆண்டு முடிவில் ரூபா 1,128,584, மீளாய்வாண்டு முடிவில் ரூபா 1,497,501 என அறவிடப்பட வேண்டியிருந்தது.

### 2.3.6 விளம்பரப் பலகைக் கட்டணம்

2011 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் 2011 ஆம் ஆண்டிற்கான விளம்பரப் பலகைக் கட்டணமாக ரூபா 2,189,265 மற்றும் அதன் மீதான வட்டியாக ரூபா 315,518 என மொத்தமாக ரூபா 2,504,783 அறவிடப்பட வேண்டியிருந்தது.

### 2.3.7 வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம்

மீளாய்வாண்டின்போது வர்த்தக அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் 914 வர்த்தக நிலையங்களுக்கு வழங்கப்பட வேண்டுமென இனங்காணப்பட்டிருந்தது. அவற்றுள் 111 வர்த்தக நிலையங்கள் மாத்திரமே அனுமதிப் பத்திரங்களைப் பெற்றதால் 803 வர்த்தக நிலையங்கள் அனுமதிப் பத்திரமின்றி வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தன. எவ்வாறாயினும், அனுமதிப்பத்திரக் கட்டணம் அவற்றிடமிருந்து அறவிடப்பட்டிருந்தன.

### 2.3.8 வர்த்தக வரி

மீளாய்வாண்டின்போது வர்த்தக வரி அறவிடப்பட்ட வேண்டுமென இணங்காணப்பட்ட 4,666 நிறுவனங்களில் 1,919 நிறுவனங்கள் மாத்திரமே வரி செலுத்தியிருந்தன. 2,747 நிறுவனங்களின் வரி அறவிடப்படாது 2011 இறுதியின் ரூபா 2,567,000 வரி நிலுவையை அறவிட 127 நிறுவனங்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

### 2.4 சொத்து முகாமைத்துவம்

### 2.4.1 பெற வேண்டிய கணக்குகள்

2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதி ரூபா 46,772,557 ஆகும். 4 ஆண்டுகளைக் கடந்த கணக்கீட்டு மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 2,403,130 ஆகும்.

### 2.4.2 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான பௌதீக வளங்கள்

பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்துவதுமான பௌதீக வளங்கள் தொடர்பான கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின்போது புலனாகிய விபரம் பின்வருமாறு.

(அ) ஏழு ஆண்டுகளுக்கு மேலாக ரூபா 4,991,140 பெறுமதியான 4 வின்வின் இயந்திரங்கள் பயன்படுத்தப்படாதிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின்போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 3,021,376 பெறுமதியான விளையாட்டுத் துறைப் பொருட்கள் ஆண்டு முடிவிலும் குறித்த உடலபிவிருத்தி நிலையம், சிறுவர் பூங்கா மற்றும் விளையாட்டுக் கழகங்கள் என்பவற்றிற்கிடையே விநியோகிக்கப்படவில்லை.

(இ) மாநகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள ஆயுர்வேத நிலையங்களுக்கு விநியோகிக்கப்பட்ட தற்போதைய பெறுமதி ரூபா 73,217 ஆகவுள்ள தயாரிக்கப்பட்ட மருந்துகளது கையிருப்பு காலங்கடந்திருந்தமையால் பயன்படுத்த முடியாதிருந்தன.

### 2.4.3 அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன்

2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறிவிடப்பட்ட வேண்டிய ஊழியர் கடன் மற்றும் முற்பண மீதிகளது மொத்தத் தொகை ரூபா 131,594,471 ஆகும். அம் மீதியில் உள்ளடங்கிய நெடுங்காலமாக அறவிடப்படாதுள்ள ரூபா 2,978,202 கூட்டுத்தொகையுடைய ரூபா 2,978,202 கடன் மீதியை அறவிடுவதற்கு மீளாய்வாண்டினதும் மாநகர சபை கவனஞ் செலுத்தவில்லை.

### 2.5 போதிய அதிகாரத் துணையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 பெப்ரவரி 09 ஆந் திகதிய 13/2008 (iv) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம், திணைக்களத் தலைவர்கள் அல்லது அதற்குச் சமமான உத்தியோகத்தர்களுக்கு பெட்றோல் / டீசல் வாகனங்களுக்கு ஒரு மாதத்திற்கென அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் அளவு 140 லீட்டர் ஆகும். மாநகர சபை ஆணையாளரால் 2011 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட லீட்டரின் அளவுக்கு அதிகமாக 1283 லீட்டர் பெறப்பட்டிருந்தது.

(ஆ) 1971 ஜூலை 26 ஆந் திகதிய 810 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய, சம்பளமற்ற லீவுக்கான அறவீடு குறித்த மாதத்திலேயோ அல்லது அடுத்த மாதத்திலோ முற்றாக மேற்கொள்ளப்பட வேண்டுமாயினும் அதற்குப் பதிலாகத் தவணை முறையில் அதனை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

### 2.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மாநகர சபை அங்கத்தவர்களுக்குப் பயணச் செலவினம் வழங்கப்படுகையில் மேல் மாகாண முதலமைச்சரின் 2005 ஜூலை 08 ஆந் திகதிய 1400/25 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் 2 ஆம் பிரிவிற்கு முரணாக குறித்த தூரக் கட்டண வரம்பை மிறி 2010 ஆம் ஆண்டில் ரூபா 185,352 மற்றும் 2011 ஆம் ஆண்டில் ரூபா 96,836 என மொத்தமாக ரூபா 282,188 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 2.7 தண்டப் பணம்

பிள்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 226(1) உப பிரிவின் பிரகாரம் பொறுப்பானவர்களுக்கு எதிராக என்னால் விதிக்கப்பட்ட 2010 ஒக்டோபர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த தண்டப்பணம் ரூபா 1,106,576 ஆகும்.

(ஆ) எதிர்காலத்தில் ரூபா 11,347,473 பெறுமதியடைய கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக என்னால் தண்டப் பணம் விதிக்கப்பட எண்ணப்படுகின்றது.

## 2.8 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

உடன்படிக்கைக் கடப்பாடின்றியும் வாடகை அறவிடப்படாதும் பள்ளியதொர எனுமிடத்தில் உள்ள சபைக்கரிய 2 இரு மாடிக் கட்டிடங்கள் கற்கை நெறிகளை நடாத்துவதற்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு வழங்கப்பட்டிருந்தது.

## 2.9 செயற்பாட்டு மற்றும் முகாமத்துவ வினைத்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 218 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், மாநகர சபையின் ஒவ்வொரு ஆண்டிற்குமான நிர்வாக அறிக்கை நிதிசார் கூற்றுக்களுடன் நிதியாண்டு முடிவுற்றதன் பின்னர், கூடிய வரையில் சபையில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டிற்கான நிர்வாக அறிக்கை தயாரிக்கப்படாததுடன் நிதிசார் கூற்றுக்களும் சபைக்குச் சமர்ப்பிக்கபடவில்லை.

(ஆ) பொருட் கொள்வனவு நடவடிக்கையின்போது அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4 ஆம் அத்தியாயத்தினது 2 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதான பொருட் கொள்வனவுத் திட்டம் மற்றும் பொருட் கொள்வனவு நேர அட்டவணை என்பன தயாரிக்கபட வேண்டுமென்பதுடன் இதன் பொருட்டு பொருட் கொள்வனவுக் கோவையின் 4.2.1, 4.2.2 , 4.2.3 மாதிரிகளுக்கமைய

அறிவுறுத்துரைகளும் கடைப்பிடிக்கப்பட வேண்டும். எனினும், நிர்மாண வேலையின்போது அவற்றிற்கான கொள்வனவுத் திட்டங்களையும் கால அட்டவணைகளையும் தயாரிக்காதிருந்தமை கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது.

(இ) 2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்து வைக்கப்படாதிருந்த ரூபா 1,416,507 முற்பணம் இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 371 க்கமையத் தீர்த்து வைக்கப்படவில்லை.

## 2.10 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) வரவு, செலவுத் திட்டத்தின் மூலம் நிதியேற்பாடு செய்யப்பட்ட 17 மீண்டுவருஞ் செலவின விடயங்கள் மற்றும் 17 மூலதனச் செலவின விடயங்கள் என்பவற்றிற்கு மதிப்பிடப்பட்ட முறையே ரூபா 1,398,000 மற்றும் ரூபா 95,875,000 ஆகிய நிதியேற்பாட்டில் எதுவுமே பயன்படுத்தப்படவில்லை.

(ஆ) நிகழ்ச்சித்திட்டம் 05 இன் கீழ், 20 மிண்டுவருஞ் செலவின விடயங்களில் 50 முதல் 97 சதவீதமும் 09 செலவின விடயங்களில் 25 முதல் 50 சதவீதமும் 16 செலவின விடயங்களில் 10 முதல் 25 சதவீதமுமாக நிதியேற்பாட்டில் சேமிப்பு அவதானிக்கப்பட்டது.

(இ) நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்ட 10 மூலதனச் செலவின விடயங்களில் வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட நிதியேற்பாட்டு வரம்பிற்கு அதிகமாக ரூபா 10,127,000 செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) ஆண்டின்போது வருவாய் மற்றும் செலவினத் தலைப்புக்களுக்கிடையே நிதியேற்பாடு மாற்றஞ் செய்து கொள்ளப்பட்டமையாலும் வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட மற்றம் உள்ளபடியான வருவாய் மற்றும் செலவினங்களுக்கிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டமையாலும் வரவு, செலவுத் திட்டம் ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டதாகத் தோற்றவில்லை.

## 2.11 ஒன்றிணைந்த திட்டம், செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் வருடாந்த செயற்திறன் அறிக்கை.

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்கப் பொது நிதித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் 5 ஆம் பந்தியின் பிரகாரம் கீழே காணப்படும் திட்டங்களும் அறிக்கைகளும் தயாரிக்கப்பட வேண்டுமாயினும் அவை தயாரிக்கப்படவில்லை.

(அ) குறைந்தது 3 ஆண்டுகளுக்கான ஒன்றிணைந்த செயல் திட்டத்தைத் தயாரிக்காமை

(ஆ) ஒன்றிணைந்த செயல் திட்டத்திற்கு அனுசரணையாக செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரித்தல்

(இ) பொது நிதிச் சுற்றறிக்கையின் 402 மற்றும் 402(i) என்பவற்றில் காணப்படும் அறிவுறுத்துரைகளில் கவனஞ் செலுத்தி செயல் நடவடிக்கைத் திட்டத்துடன் இணங்கியவாறு குறித்த தினத்தன்று வருடாந்த செயல் திறன் அறிக்கையைத் தயாரித்து அதனைக் குறித்த நிறுவனத்திற்குச் சமர்ப்பித்தல்.

## 2.12 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 133(1) மற்றும் (2) என்பவற்றிக்கமைய உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் நடவடிக்கைகள் திட்டமிடப்படவில்லை.

(ஆ) நி.பி 134(1) (2) (3) என்பவற்றின் பிரகாரம்

i. நிறுவனத்தின் நிதி மற்றும் நிர்வாக நடவடிக்கைகளுக்கு அப்பால் சுதந்திரமான கூறாகத் தொழிற்படாமை

ii. உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் இசைவுடன் தயாரிக்காமை

**iii.** உள்ளகக் கணக்காய்வு அறிக்கைப் பிரதிகளைக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பித்தல்

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கணக்காய்வு

(இ) வரவு, செலவுத்திட்டக் கட்டுப்பாடு

(ஈ) வருவாய் நிர்வாகம்

(உ) சொத்து முகாமைத்துவம்

(ஊ) கடன்பட்டோர், கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு

(எ) மனிதவள முகாமைத்துவம்